# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 20 புதன்கிழமை 12.02.2025 கதிர் 125



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel







# சட்டவிரோத விகாரையை உடனடியாக அகற்றுங்கள்

## தையிட்டியில் மாபெரும் போராட்டம் பல்வேறு தரப்பினரும் இன்று பங்கேற்பு

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றிப் பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி மாபெரும் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இந்த விகாரைக்கு எதிராக நேற்று மாலை முதல் ஆரம்பமாகிய போராட்டம், இரண்டாவது நாளாக இன்று மாபெரும் போராட்டமாக இடம்பெற்றது.

## ஈ.பி.டி.பியின் முன்னாள் எம்.பி. திலீபன் இந்தியாவில் கைது!




கொழும்பு, பெப். 12

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியாவின் மதுரைக்குச் சென்ற திலீபன், அங்கிருந்து பிறிதொரு கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முற்பட்ட நிலையில்

7➤

## கிளிநொச்சியில் கிணற்றிலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு!



கிளிநொச்சி, பெப். 12

கிளிநொச்சி, புளியம் பொக்கனை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட முசிரம்பிட்டி பகுதியில் அமைந்துள்ள பொதுக் கிணற்றில் இருந்து இளைஞர் ஒருவர் இன்று சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

29 வயதுடைய சற்குணராசா பிரதீபன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

## அர்ச்சுனா எம்.பி. தாக்கியதாக ஒருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணம் தனியார் விருந்தினர் விடுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் தாக்குதலுக்குள்ளான நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர்

7➤

## கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி வெதகெதரவுக்குத் திடீர் இடமாற்றம்



கோப்பாய், பெப். 12

யாழ். கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வெதகெதர

7➤

# நட்டஈடு வழங்கியமைக்கு விசாரணை தேவை



கொழும்பு , பெப். 12

கொழும்பு - காலி முகத்திடல் இடம்பெற்ற போராட்டத்தின்போது தீக்கிரையாக்கப்பட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு, நட்டஈடு வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. எந்த ஒரு முறைமையையும் பின்பற்றாமல் இந்த நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ள சிவில் செயற்பாட்டாளர்கள் சிலர் செவ்வாய்க்கிழமை அன்று இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

சிவில் செயற்பாட்டாளரான எச்.எம்.எஸ்.பி. மெதவத்த உள்ளிட்ட சிலரே, இவ்வாறு மேற' படி ஆணைக் குழுவில் முறைப்பாட்டை முன் வைத்துள்ளனர். திறைசேரியினால் விடுவிக்கப்பட்டுள்ள மேற்படி கோடிக்கணக்கான நட்ட நிதி, நாட்டு மக்களின் நிதி என்பதையும், பொதுச் சொத்து என்பதையும் முறைப்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், இவ்வாறு முறையின்றி வழங்கப்பட்ட நஷ்ட ஈடுகளை மீளப்பெறுமாறு ஆணைக் குழுவிடம் கோரியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களுக்கு கோடிக்கணக்கான அல்லது மில்லியன் கணக்கான சொத்துக்கள் உள்ளன. நீண்ட காலமாக அரசியலில் இருந்துள்ள இவர்களுக்கு அவ்வாறான சொத்துக்களை சேர்க்கும் அளவுக்கு சம்பளம் இருக்கவில்லை.

அவ்வாறானால் அத்தகைய கோடிக்கணக்கான சொத்துக்களை எவ்வாறு சம்பாதித்தார்கள் என்ற கேள்வி எழுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த வகையில், எவ்வாறு அவர்கள் இந்தளவு சொத்துக்களை சம்பாதித்தார்கள் என்பதையும் அவர்களுக்கான நட்ட ஈடு எந்த முறைமையின் கீழ் எவ்வாறு மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்டது என்பது தொடர்பிலும் உடனடியாக விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ)

# 12 பேரை நாடுகடத்த உத்தரவு

கொழும்பு , பெப். 12

சுற்றுலாப் பயணிகளாக வந்து விசா இல்லாமல் நாட்டில் தங்கியிருந்த சீன பிரஜைகள் 12 பேரையும் ஒரு வியட்நாம் பிரஜையையும் உடனடியாக நாடு கடத்த கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவெல செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார். குடியகல்வு மற்றும் குடிவரவு சட்டங்களை மீறியதாக கண்டறியப்பட்ட குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றாலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் விரைவில் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு விசாக்களை பெற்றுள்ளனர் என்பதை கருத்தில் கொண்டு நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று நீதவான் அறிவுறுத்தியுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க குடிவரவு மற்றும் குடியேற்ற அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், சந்தேக நபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 50,000 அல்லது 6.5 மில்லியன் அபராதம் விதிக்கவும், அபராதம் செலுத்தப்படாவிட்டால், குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவருக்கு கட்டாய ஆறு மாத சிறை தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவிடப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தலா ஒரு வருடம் சிறை தண்டனை விதித்த மேலதிக நீதவான், முன்வைக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தண்டனையை ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைத்ததுடன், அபராதம் செலுத்துவது கட்டாயமாகும் என்றும் உத்தரவிட்டார். (ஐ)

# 18 வயதுக்கு உட்பட்டோர் ஒன்லைனில் விளையாட தடை



சிறுவர்கள் ஒன்லைனில் பணம் கட்டி விளையாட தடை விதித்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக அரசுக்கு ஒன்லைன் விளையாட்டு ஆணையம் பல்வேறு பரிந்துரைகளை அளித்துள்ளது. அதனடிப்படையில், தமிழக அரசு பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: ஒன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் வகையில் விதிகளை கடுமையாக்கப்பட்டுள்ளன. அதன்படி, 18 வயதுக்குட்பட்டவர்கள் ஆன்லைனில் பணம் கட்டி விளையாட தடை விதிக்கப்படுகிறது. மற்ற வயதினர் நள்ளிரவு 12 முதல் அதிகாலை 5 மணி வரை விளையாட தடை விதிக்கப்படுகிறது.

ஒன்லைன் விளையாட்டு நிறுவனங்கள், செயலி மற்றும் பிற சாதனங்கள் வாயிலாக வாடிக்கையாளர்கள் ஒன்லைன் விளையாட்டில் ஈடுபட கணக்கு தொடங்கும் போது கேஒய்சி கட்டாயம். அதன்படி, ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள செல்போன் எண்ணுக்கு ஓடிபி அனுப்பி சரிபார்க்க வேண்டும். ஒருவர் ஒன்லைனில் ஒரு மணி நேரமாக விளையாடும்போது, அவருக்கு 30 நிமிடங்களுக்கு ஒருமுறை எச்சரிக்கை குறுஞ்செய்தி அனுப்ப வேண்டும். அனைத்து ஒன்லைன் விளையாட்டு நிறுவனங்களும் நாள், வாரம், மாதம் என்றளவில் எவ்வளவு தொகைக்கு விளையாட வேண்டும் என்பதை நிர்ணயம் செய்யும் வசதியை ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாக விளையாட்டுக்குள் நுழையும் போது, 'ஒன்லைன் விளையாட்டு இயற்கையில் அடிமையாக்கும் இந்த விளையாட்டுகள் போதை பொருளுக்கு நிகரானது' என்ற எச்சரிக்கை செய்திகளை தொடர்ந்து காட்ட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# உச்சி மாநாட்டில் ஜனாதிபதி இன்று உரையாற்றவுள்ளார்



கொழும்பு , பெப். 12

உலக அரசாங்கங்களின் உச்சி மாநாட்டின் பிரதான அமர்வில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க உரையாற்ற உள்ளார். அங்கு அவர் பொருளாதார வளர்ச்சி, புதுமை மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்த இலங்கையின் தொலைநோக்கு பார்வையை கோடிட்டுக் காட்டுவார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிலையாபேறான வளர்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை அவரது உரை எடுத்துக்காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் மூன்றாவது நாள் இன்று ஆகும்.(ஐ)

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டில்



கொழும்பு , பெப். 12

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின்விலைகளைக் கட்டுப்பாட்டில்வைத்திருப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும், புத்தாண்டு காலத்தில் தேவைப் படும் அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ச்சியாக விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதை உறுதி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் இரண்டாவது முறையாகக் கூடி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை தீர்மானங்களை எடுப்பது தொடர்பிலும் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளனர்.

நெல் கொள்வனவு குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

நெல் கொள்வனவுக்காக ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளின் கீழ், கொள்வனவு செய்யப்படும் நெல்லின் அளவைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதோச நிறுவனம் அண்மையில் தெரிவித்திருந்தது. (ஐ)

# சுவிஸ் அரசாங்கத்தின் உதவியை கோரிய சஜித்



கொழும்பு , பெப். 12

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சுவிஸ் தூதர் சிரி வால்ட் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையே கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது.

சந்திப்பின் போது, இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கத்தின் அதிகபட்ச உதவியை பிரேமதாச கோரினார். புதைபடிவ எரிபொருட்களிலிருந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறுவதற்கான சுவிட்சர்லாந்தின் 2023 சட்டத்தை அவர் பாராட்டினார், இது காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதில் ஒரு வரலாற்று நடவடிக்கை என்று விவரித்தார்.

இலங்கையின் சமீப பத்திய மின்வெட்டு குறித்துப் பேசிய பிரேமதாச, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு முன்னுரிமை அளிக்குமாறு தானும் மற்றவர்களும் அரசாங்கத்தை பலமுறை வலியுறுத்தியதாகக் கூறினார்.

மின்சார நுகர்வு மற்றும் எரிசக்தி உற்பத்தியில் உள்ள பொருத்தமின்மையால் ஏற்படும் அமைப்பு ஏற்றத்தாழ்வுகள் மின்வெட்டுக்கு வழிவகுத்தன என்று அவர் விளக்கினார். நிர்வாகம் புறக்கணித்துள்ள பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்புகள் (BESS) மற்றும் பம்ப் செய்யப்பட்ட சேமிப்பு மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற முக்கியமான உள்கட்டமைப்புகளுக்கான அவசரத் தேவையையும் அவர் வலியுறுத்தினார்.

சுவிஸ் தூதரிடம் ஆதரவைக் கோரிய பிரேமதாச, தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்கும் எதிர்கால மின்வெட்டைத் தடுப்பதற்கும் அரசாங்கம் உடனடியாக குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்னவும் சந்திப்பில் கலந்து கொண்டார். (ஐ)



# மிதி வெடி

யாழ்ப்பாணத்தில "ரியூட்டறி" நடத்திறதும் "பேக்கறி" நடத்திறதும் ஒண்டு எண்ட நிலமை வந்திட்டுது பாருங்கோ.

வடிவேலு நடத்தின அந்த "பேக்கறி" இல்லப் பாருங்கோ இது. வடிவேலுவின்ர "பேக்கறி" கதையையும், அதில வாற அக்கா வையும் "ரியூட்டறி" கதையோட கோர்த்துப் பாராதேங்கோ. அது வேற - இது வேற.

நான் என்ன சொல்ல வாறன் எண்டால். எப்பிடி யாழ்ப்பாணத்தில இருக்கிற "பேக்கறி" யளுக்கு என்னதான் கட்டுப்பாட்டைப் போட்டாலும், அவையள் புதுப்புதுக் கதையள் விடுகினம் எல்லோ. ? அந்த மாதிரித் தான் "ரியூட்டறி"க் காரரும் காரணம் கற்பிச்சுக் காரியத்தைக் கொண்டு போகினமாம் பாருங்கோ..

"பேக்கரி"க்காரர் எல்லாரும் ஒண்டாக் கூடி - கதைச்சுப் பேசி பாணுக்கு கட்டுப்பாட்டு விலை போட்டவை தானே?ஞாபகமிருக்கும் எண்டு நினைக்கிறன்? நாட்டில பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில, நாடு பூராவும் பாண் விலையைக் கூட்டேக்க எங்கட ஆக்கள் யாழ்ப்பாணத்தில மட்டும் விலை மாறாமில்லை எண்டு அறிவிச்சவை.

"யாழ்ப்பாணத்தான்" எண்ட "கெத்து" விட்டுப் போகாமல் பாத்தவை. ஆனாலும் பாருங்கோ. உந்த "பேக்கறி" க்காரருக்குள்ள சில பேர் உருட்டுப் பிரட்டுப் பண்ணி பாண் வியாபாரம் செய்யினம்.

ஒரு இறாத்தல் பாண் நூற்றி நாப்பது ரூபா விக்க வேணும் எண்டு முடிவெடுத்து "பேக்கறி" சங்கம் கட்டுப்பாட்டு விலை அறிவிச்சாலும், எங்கட ஆக்கள் ஒரு துளி உப்பு கூடப் போட்டிருக்கிறம் எண்டு சொல்லி அதுக்கு "ஸ்பெசல் பாண்" எண்டு பேரும் வைச்சு பத்து ரூபா கூட்டி விக்கினம். உது ஒரு உதாரணத்துக்குச் சொல்லுறன்.

சங்கத்து முடிவை மீறி நடக்கிறதை ஞாயப்படுத்தினாத் தான் அவைக்கு நித்திரையே வரும் போல..

உப்பிடித்தான் உங்க கொஞ்ச "ரியூட்டறி"க் காரரும் வெளிக்கிட்டிருக்கினம். நீங்கள் என்ன தான் சட்டத்தைப் போட்டாலும், நீங்கள் அந்தச் சட்டத்தின் படியே சுத்தமாத்துவம். எண்டு செய்யினம் பாருங்கோ..

கொஞ்ச நாளைக்கு முன்னம் யாழ்ப்பாணத்தில இருக்கிற எல்லா "ரியூட்டறி"க் காரரையும் கூப்பிட்ட மாவட்ட - மாகாண நிர்வாகிகள், "ஏ. எல்" பிள்ளையளை விட மற்ற எல்லா வகுப்புக்கும் ஞாயிற்றுக்கிழமையளில வகுப்பு நடத்த வேணாம் எண்டு கேட்டிருக்கினம்.

அதுவும் உண்மை தானே பாருங்கே கிழமையில எல்லா நாளும் "படி, படி" எண்டு பிள்ளையளைப் போட்டு தாய்மார் இடிக்க, பிள்ளையளுக்கு படிப்பு தவிர்ந்த புறக்கிருத்தியச் செயற்பாடுகளில ஈடுபாடே இல்லாமல் போகுது. தாங்கள் கும்பிடுற கோயிலுக்குக் கூட ஒழுங்காப் போய் கும்பிட முடியாத நிலமை. இதுக்குள்ள காலையில ஆறு மணிக்குத் தொடங்கினால் கிட்டத்தட்ட இரவு எட்டு மணி வரைக்கும் பிள்ளையும் ஓடும், பிள்ளைக்குப் பின்னால பெற்றோருக்கும் ஓட்டம்.

ஞாயிற்றுக்கிழமையில ஓய்வு குடுத்தால், பிள்ளை திங்கட்கிழமை புதுப் பொலிவோட அடுத்த வாரத்தை ஆரம்பிக்கலாம் எண்டு தானே அதிகாரிகளும் அப்பிடி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தவை. அதிகாரிகளோட நடந்த அந்தச் சந்திப்பில "ஓம். ஓம்" எண்டு தலையாட்டினது மட்டுமுல்லாமல், அப்பிடி ஒரு முடிவை எடுப்பம் எண்டு சொல்லி முன்னுக்கு நிண்ட ரெண்டு - மூண்டு "ரியூட்டறி"க் கார முதலாளிமார் தான் இப்ப "பேக்கறி"க்காரர் விக்கிற "ஸ்பெசல் பாண்" போல. "இங்கலீஷ் மீடிய கிளாஸ்" நடத்துகினமாம்.

"இங்கிலீசோ", தமிழோ. "மீடியம்" எண்டதே முக்கியம்? பிள்ளையளுக்கு வாரத்தில ஒரு ஓய்வு, சமயம் - சமூகம் எண்டு படிப்பைத் தவிர மிச்சத்துக்கும் கொஞ்ச நேரம் ஒதுக்கட்டும் எண்டு தானே ஞாயிறு விடுமுறை எண்டு அறிவிச்சவை?

இவை என்னடா எண்டா தமிழ் "மீடியம்" எண்டா இழக்காரம், "இங்கிலீஸ் மீடியம்" உசத்தி எண்டு பிள்ளையளுக்குள்ள பேதத்தை எல்லோ வளக்கினம்?

காலம் வேற கெட்டுக் கிடக்கிற நேரத்தில இருண்ட பிறகும் "கிளாஸ்" போட்டு தாய் - தகப்பன் மாருக்குள்ள வேற பிரச்சினையளும் வருதாமெண்டு கேள்வி.. ஆரைக் குறை சொல்லி என்ன ஆகப்போகுது?

தாங்கள் செய்யுற ஒவ்வொண்டுக்கும் புதுசு புதுசாக் காரணம் சொல்லுறவை தாங்களாத் திருந்தாத வரை கூட்டங்கள் போட்டு என்னதான் புதுச் சட்டங்கள அறிவிச்சாலும் எங்கட ஆக்கள் "தண்ணிக்குள ளால நெருப்பைக் கொண்டு போவினம்" பாருங்கோ...

எங்கட அதிகாரிமாரும் சும்மா "ஒப்புக்குச் சப்பாணி" எண்டது கணக்கா கூப்பிட்டுக் கதைச்சமா, நாலு "மைக்"குக்கு முன்னால இருந்து "ப்ரஸ் ரிலீஸ்" விட்டமா எண்ட அளவுல எல்லாத்தையும் கண்டும் காணாமல் விட்டுட்டு இருக்கினம் போல.?

கொஞ்சம் இறுக்கினாலும் பிறகு தன்ர பிள்ளை தமிழுக்கும், வரலாற்றுக்கும் வேற எங்க போறது? எண்டதையெல்லே யோசிக்கினம்?

–நரமுனி–

# ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளை அடிக்கடி மாற்றக்கூடாது



ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளை அடிக்கடி மாற்றி அரசு நிர்வாகத்தை முடக்கக் கூடாது. செயலர்களுக்கு 2 ஆண்டு உறுதி செய்யப்பட்ட பணிக்காலம் தேவை என பா.ம.க., நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தமிழகத்தில் பல்வேறு முக்கியத் துறைகளின் செயலாளர்கள் உள்ளிட்ட 38 ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது அரசு அதிகாரிகள் மத்தியில் அதிருப்தியையும், முணுமுணுப்பையும் ஏற்படுத்தியிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. கடந்த ஜனவரி 31ம் தேதி 31 அதிகாரிகள் மாற்றப்பட்ட நிலையில், அடுத்த 10 நாட்களில் 38 அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டிருப்பது தேவையற்றது.

அரசு நிர்வாக வசதிக்காக அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கான அனைத்து அதிகாரங்களும், உரிமைகளும் அரசுக்கு உண்டு. ஆனால், அவ்வாறு செய்யப்படும் மாற்றங்கள் அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். மாறாக நிர்வாகத்தின் செயல்பாட்டை முடக்குவதாக இருக்கக் கூடாது. இப்போது செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த எந்த வகையிலும் உதவாது.

கடந்த ஜூலை மாதத்தில் தான் சுற்றுச்சூழல் துறை செயலாளராக இருந்த சுப்ரியா சாகு மருத்துவத்துறை செயலாளராகவும், அதற்கு சில மாதங்களுக்கு முன் வரை மருத்துவத்துறை செயலாளராக இருந்த செந்தில்குமார் சுற்றுச்சூழல் துறை செயலாளராகவும் மாற்றப்பட்டனர். அடுத்த 6 மாதங்களில் இருவரும் தங்களின் பழைய துறைகளுக்கே மாற்றப்பட்டுள்ளனர். அப்படியானால், என்ன காரணத்திற்காக அவர்கள் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டனர்? இப்போது என்ன காரணத்திற்காக அவர்கள் மீண்டும் பழைய துறைகளுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்? என்ற வினா மக்கள் மனங்களில் எழுகிறது. அவற்றுக்கு விடையளிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தின் மின்வாரியத் தலைவராக நியமிக்கப்பட்ட நந்தகுமார், உயர்கல்வித்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட கோபால், கடந்த ஜூலை மாதத்தில் பொதுப்பணித்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட மங்கத்ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பத்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட குமார் ஜெயந்த், கூட்டுறவு மற்றும் உணவுத்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட இராதாகிருஷ்ணன் ஆகியோர் கடந்த 3 முதல் 6 மாதங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வளவு குறுகிய இடைவெளியில் ஓர் அதிகாரியின் செயல்பாட்டை எவ்வாறு மதிப்பிட முடியும்?

பள்ளிக்கல்வித்துறை செயலாளராக இருந்தவர்கள் கடந்த சில மாதங்களில் 4 முறை மாற்றப்பட்டுள்ளனர். உயர்கல்வித்துறை செயலாளராக இருந்த கோபால் கடந்த சில மாதங்களில் 4 முறை பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவை அனைத்துக்கும் என்ன அடிப்படை? வருவாய் நிர்வாக ஆணையராக நியமிக்கப்பட்டிருந்த ராஜேஷ் லக்கானி அடுத்த சில வாரங்களில் மத்திய அரசுப் பணிக்கு சென்றுவிட்டார். மேலும் பல இந்திய ஆடசிப்பணி அதிகாரிகளும் மத்தியப் பணிக்கு செல்ல விண்ணப்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் தமிழ்நாட்டில் பணியாற்ற விரும்பவில்லை என்று தெரிகிறது. இவை நல்ல அறிகுறிகள் அல்ல.

ஒரு துறையில் செயலாளராக நியமிக்கப்படுபவர் அத்துறை குறித்த அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்வதற்கு குறைந்தது இரு மாதங்கள் தேவை. அதன் பிறகு தான் அவர்கள் முழு வீச்சில் செயல்படத் தொடங்குவார்கள். அதற்குள்ளாகவே அவர்களை பணியிட மாற்றம் செய்து புதிய பணியில் அமர்த்தும் போது அரசு நிர்வாகத்தின் செயல்திறன் பாதிக்கப்படும். இத்தகைய அணுகுமுறையை தமிழக அரசு கைவிட வேண்டும்.

காவல்துறை தலைமை இயக்குனர் பணியில் அமர்த்தப்படுபவர்கள் அந்தப் பதவியில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டு உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் அந்தப் பதவியில் நியமிக்கப்படுவோருக்கு 2 ஆண்டுகள் உறுதி செய்யப்பட்ட பணிக்காலம் வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. அரசுத் துறை செயலாளர் பதவிகளும் காவல்துறை தலைமை இயக்குனர் பணிக்கு இணையான முக்கியத்துவம் கொண்டவை தான் என்பதால் அவற்றுக்கும் 2 ஆண்டு உறுதி செய்யப்பட்ட பணிக்காலம் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும். இவ்வாறு ராமதாஸ் கூறியுள்ளார். (ஐ)



## அதெல்லாம் அன்றோடு முடிந்தது நழுவினார் செங்கோட்டையன்

வீட்டின் முன் கூடும் தொண்டர்கள் குறித்து நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு, ‘அன்று பேசியது அன்றே முடிந்தது. ஆள விடுங்க’ என கையெடுத்து கும்பிட்டு விட்டு அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நழுவி சென்றார்.

அத்திக்கடவு - அவிநாசி திட்டத்துக்கு நிதி ஒதுக்கி செயல்படுத்திய, அ.தி.மு.க., பொதுச்செயலர் இ.பி.எஸ்.,க்கு, அத்திக்கடவு - அவினாசி திட்ட கூட்டமைப்பு சார்பில், கோவை மாவட்டம், அன்னூர் அருகே பாராட்டு விழா நடந்தது. இதில், அ.தி.மு.க., முன்னாள் அமைச்சரும், கோபி எம்.எல்.ஏ.,வுமான செங்கோட்டையன் பங்கேற்கவில்லை.

எம்.ஜி.ஆர்., மற்றும் ஜெயலலிதா படங்கள், அதற்கான விழா அழைப்பிதழ், பிளக்ஸ் பேனர், டிஜிட்டல் போர்டுகளில் இடம் பெறவில்லை. பாராட்டு விழாவுக்கு செல்லவில்லை’ என, விளக்கம் அளித்திருந்தார். செங்கோட்டையின் எதிர்ப்பு சமூக வலைத்தளத்தில் பேசும் பொருளாகியது.

இந்நிலையில் இன்று, அ.தி.மு.க., உட்கட்சி விவகாரத்தை தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம் என்று சென்னை ஐகோர்ட் தீர்ப்பளித்த நிலையில், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கோபி செட்டிபாளையத்தில் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியானது.

அவரை பேட்டி எடுக்க செய்தியாளர்கள் கூடினர். அவர்களிடம் கையெடுத்து கும்பிட்ட செங்கோட்டையன், எதுவும் பேச மறுத்தார். கட்சியினர் கூடியிருப்பது பற்றி கேட்டபோது அவர் கூறுகையில், “பொதுக்கூட்டம் நடத்துவது தொடர்பாக கட்சிக்காரர்கள் என்னைச் சந்திக்க வந்துள்ளனர்.

எப்போதும் எனது வீட்டில் கூட்டம் இருப்பது வழக்கம் தான். எந்த ஆலோசனையும் நடத்தவில்லை. அன்று பேசியதெல்லாம் அன்றோடு முடிந்தது் ஆள விடுங்க,” என பதில் அளித்து கையெடுத்து கும்பிட்டு விட்டு செங்கோட்டையன் காரில் புறப்பட்டு சென்றார். (ஐ)

# எதற்கு தேர்தல் வியூக நிபுணர்கள்

## கேட்கிறார் சீமான்

“பணக்கொழுப்பு அதிகமாக இருந்தால் தான் தேர்தல் வியூக நிபுணர்கள் எல்லாம் தேவைப்படுவார்கள்,” என த.வெ.க., தலைவர் விஜயை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கடுமையாக சாடினார்.

இது குறித்து நிருபர்கள் சந்திப்பில் சீமான் கூறியதாவது: ஈரோடு கிழக்கில் எங்களுக்கு குறைந்தது 40 ஆயிரம் ஓட்டுக்கள் வந்திருக்க வேண்டும் . முடிவு செய்து 25 ஆயிரத்தோடு நிறுத்தி வைத்துவிட்டார்கள். ஓட்டுக்கு காசு கொடுப்பது குற்றம்தானே. அதனையும், கள்ள ஓட்டுப் போடுவதையும் அனுமதிக்கும் தேர்தல் கமிஷன் , ஓட்டுகளை மட்டும் நேர்மையாக எண்ணுவார்களா? ஈரோடு இடைத்தேர்தலில் நான் வைப்புத்தொகை வாங்கக்கூடாது என்று முடிவு செய்துவிட்டனர்.



ஈ.வெ.ரா., தான் வேண்டும் என்றால் நா.த.க.,விலிருந்து வெளியேறலாம்: சீமான்

ஒட்டு எண்ணிக்கையின் போது இதோடு போதும் என்று நிறுத்தி விட்டார்கள். பிரச்னையோடும், கண்ணீரோடும், மனுக்களோடும் வீதியில் நின்று போராடும் மக்களோடு நான் கூட்டணியில் இருக்கிறேன். இங்கு எல்லாத் தலைவர்களையும் ஒரு சாதிக் குறியீடாக நிறுத்தி விட்டார்கள் . நான் தமிழ்த் தாயின் பிள்ளையாகவே இருக்கிறேன். என்னையாவது விட்டு விடுங்கள். நாட்டை சிறப்பாக ஆட்சி செய்த என் முன்னோர் எல்லோரும் தேர்தல் வியூக நிபுணர்களை வைத்துக் கொள்ளவில்லை பிரசாந்த் கிஷோருக்கு தமிழகம் பற்றி என்ன தெரியும்? தனது நாட்டில் என்ன செய்ய வேண்டும் என்பதே தெரியாமல், ஏன் இந்த வேலைக்கு வேண்டும்? மேஜையில் உட்கார்ந்து கொண்டு கத்திரிக்காய்... சுரைக்காய்... என்று எழுதி என்ன பயன்?

பணக்கொழுப்பு அதிகமாக இருந்தால் தான் தேர்தல் வியூக நிபுணர்கள் எல்லாம் தேவைப்படுவார்கள். இவ்வாறு சீமான் கூறினார். (ஐ)

## பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் அமைய இது நடக்கணும்

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் அமைய வேண்டும் என்றால், அ.தி.மு.க., ஆட்சி அமைய வேண்டும் என அக்கட்சி பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை: ஸ்டாலின் மாடல் தி.மு.க., ஆட்சியில் பெண்களுக்கு துளியும் பாதுகாப்பு இல்லை என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. சிறுமி முதல் மூதாட்டி வரை, பாலியல் வன்கொடுமையால் பெண்கள் பாதிக்கப்படுவதும், அரசுப்பள்ளி முதல் ஓடும் ரயில் வரை பெண்களுக்கு எங்குமே பாதுகாப்பு இல்லை என்பதும் வேதனைக்குரியது.

யார் அந்த ஞஜசு என்ற கேள்விக்கு இன்று வரை, இதுவரை பதில் இல்லை. யார் அந்த ஞஜசுகள் என்று கேட்டால், குற்றவாளிகளை கண்டுபிடிப்பதை விட, குற்றவாளிகளின் பாட்டன் வம்சத்தில் இருப்பவர்கள் யாராவது தொலைதூரத்தில் அ.தி.மு.க.,வுடன் தொடர்பில் இருக்கிறார்களா? என்று புலனாய்வு மேற்கொள்வதில் மட்டுமே முனைப்பாக இருக்கிறது இந்த ஸ்டாலின் மாடல் அரசு. இந்த விடியா தி.மு.க., ஆட்சியாளர்களா பெண்களைப் பாதுகாக்கப் போகிறார்கள்? கண்டிப்பாக வாய்ப்பே இல்லை. எனவே தான், பெண்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட முன்னெடுப்புகளை தொடர்ந்து அ.தி.மு.க., மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் அமைய வேண்டும் என்றால், அதற்கு ஒரே வழி இந்த ஸ்டாலின் மாடல் தி.மு.க., அரசு வீழ்ந்து, அ.தி.மு.க.,வின் நல்லாட்சி அமைவது தான். போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிரான போராட்டத்துடன் பெண்கள் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான போராட்டம் தொடரும்! வெற்றி பெறும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

# மனமே மகிழ்ந்திரு!



சிலர் இருக்கிறார்கள். எவ்வளவு பொருள், பணம் கிடைத்தாலும் தன்னிடம் இல்லாத ஒன்றுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டு, இருப்பதையும் அனுபவிக்காமல் வீணடித்து விடுவார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். ஒரு சின்னஞ்சிறு வெற்றியோ, சந்தோஷமோ, பொருளோ கிடைத்தாலும் போதும். அதைக் கொண்டாடித் தீர்த்து விடுவார்கள். அவர்களிடம் எப்போதும் மகிழ்ச்சியும், நிம்மதியும் கொட்டிக் கிடக்கும்

நம்முடைய மனம் எந்த விஷயத்தோடு தொடர்பு கொண்டுள்ளதோ அது தொடர்பான அனுபவங்கள் எண்ணங்களாகப் பரிணமிக்கின்றன. இந்த அனுபவங்களை மனம் அளவிடுவதே எண்ணங்களாக மாறுகின்றன.

எந்த ஒரு விஷயத்தையும் நேர்மறை மற்றும் எதிர்மறை என்ற இரண்டு விதமாக சிந்திக்கலாம். நேர்மறை நல்ல ஆற்றலையும், எதிர்மறை அதற்கு மாறான ஆற்றலையும் தருகிறது. இதற்கு ஓர் அழகான உதாரணத்தைச் சொல்லலாம். ஒரு ரோஜாச் செடியில் அழகான பூவைக் காண்பவர்கள் நேர்மறையான சிந்தனைகள் உடையவர்களாகவும், அதன் கூரிய முட்களைக் காண்பவர்கள் எதிர்மறையான சிந்தனைகள் உள்ளவர்களாகவும் கருதப்படுவார்கள்.

நாம் எப்போதும் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஆனால் அந்த மகிழ்ச்சியும், நிம்மதியும் எல்லோருக்கும் கைவரப் பெறுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் நமது மகிழ்ச்சியும், நிம்மதியும் நம்மிடம்தான் இருக்கின்றன. அதை நிறையப் பேர் தேடிக் கண்டறிவதில்லை. எப்போது இவற்றை வெளியில் தேடுகிறோமோ அப்போதே இவை நாம் என்ன முயன்றாலும் கைவரப் பெறுவதில்லை. 'மகிழ்ச்சியும் நிம்மதியும் கிடைக்கும் வெற்றி தருணங்களில் இல்லை அதை ஏற்றுக் கொள்ளும் நம் மனநிலையில்தான் இருக்கிறது..' என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

சிலர் இருக்கிறார்கள். எவ்வளவு பொருள், பணம் கிடைத்தாலும் தன்னிடம் இல்லாத ஒன்றுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டு, இருப்பதையும் அனுபவிக்காமல் வீணடித்து விடுவார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். ஒரு சின்னஞ்சிறு வெற்றியோ, சந்தோஷமோ, பொருளோ கிடைத்தாலும் போதும். அதைக் கொண்டாடித் தீர்த்து விடுவார்கள். அவர்களிடம் எப்போதும் மகிழ்ச்சியும், நிம்மதியும் கொட்டிக் கிடக்கும்.

'நல்லதே நடக்கும், நடக்கட்டும்' என்று எண்ணுவது அவ்வளவு சுலபம் அல்ல. நல்லதை நினைக்கும் போதுதான் அல்லதுகள் பலதும் வரிசை கட்டி வந்து மனதில் மோதும். ஏனென்றால் நம்மைச் சுற்றிலும் எதிர்மறை எண்ணங்கள்தான் பெருகிக் கிடக்கின்றன. வீட்டில், சமூகத்தில், ஊடகங்களில் எங்குமே எதிர்மறைச் செய்திகள்தான் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எதிர்மறை விஷம் போல் பரவுகிறது. நேர்மறை அவ்வளவு வேகமாகப் பரவுவது இல்லை.

இத்தகைய எதிர்மறை எண்ணங்கள் கொண்ட மனிதர்கள்தான் நம்மிடையே அதிகமாக இருக்கிறார்கள்.

எப்போதும் நேர்மறை எண்ணங்களை நமக்குள் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒரு வெற்றுப் போத்தலில் உள்ள காற்றை வெளியேற்ற வேண்டும் என்றால், அதனுள் முதலில் தண்ணீரை ஊற்ற வேண்டும். அப்போது காற்று தானாகவே வெளியேறிவிடும். அது போல நாம் எதிர்மறை எண்ணங்களை நமக்குள்ளிருந்து அகற்ற வேண்டும் என்று நினைத்தால், முதலில் நம் மனதை நேர்மறைச் சிந்தனைகளால் நிரப்ப வேண்டும். அப்போது தானாகவே நாம் நினைத்தது நடக்கும்.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின்' என்பது வள்ளுவர் வாக்கு. ஒரு செயலைச் செய்து முடிக்க எண்ணுபவர் அந்தச் செயலைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற மன உறுதியும், வலிமையும் உடையவராக இருந்தால், அவர் எண்ணியவாறு வெற்றி பெறுவார் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. எண்ணங்களுக்கு எப்போதுமே மிகுந்த வலிமையும், சக்தியும் உண்டு. 'எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்' என்பது பாரதி வாக்கு. நம் எண்ணங்களால் நம்முடைய வாழ்வில் நிச்சயம் தாக்கம் உண்டு.

எண்ணுவதெல்லாம் உயர்வாகவே இருக்க வேண்டும். சாதகமான சூழலில் நல்ல எண்ணங்களோடு இருப்பது முக்கியமில்லை. நமக்குப் பாதகமான சூழ்நிலையிலும்கூட நாம் நல்ல எண்ணங்களை மட்டுமே கைக்கொள்ள வேண்டும். ஏனெனில் நம் மனம் எதை அதிகமாக உள்ளே அனுமதிக்கிறதோ, அதை ஆழமாக வேரூன்றிக் கொள்ளும். அதனால் எதிரமறை சிந்தனைகளுக்கு 'தடா' போடுவோம். "நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்" என்கிறார் விவேகானந்தர்.


இதற்கு ஒரு கதை சொல்லுவார்கள். ஒரு நாட்டின் அரசரும், மந்திரியும் மாறுவேடத்தில் நகர் வலம் சென்று கொண்டிருக்கும் போது, வழியில் ஒரு மரக் கடையைத் தாண்டிச் செல்வார்கள். அப்போது அரசனின் மனதில், 'அந்தக் கடைக்காரனைக் கொன்று விட வேண்டும்' என்ற எண்ணம் தோன்றும். அதை மந்திரியிடம் தெரிவிப்பார். அதிர்ச்சியடைந்த மந்திரி மறுநாள் காலை தனியே வந்து அந்த கடைக்காரரைச் சந்திப்பார். 'விறகுகள் நன்றாக விற்பனையாகிறதா?' என்று விசாரிப்பார். அவர் வருத்தத்துடன்,"இல்லை. என்னிடம் யாரும் விறகுகளை வாங்குவதில்லை. நல்ல சந்தனக் கட்டைகளை வைத்திருக்கிறேன். அவற்றை முகர்ந்து பார்ப்பதோடு சரி, யாரும் காசு கொடுத்து வாங்குவதில்லை. ஒருவேளை இந்த நாட்டின் அரசன் இறந்தால் இந்த சந்தன கட்டைகள் அவரை எரிக்க விற்பனையாகலாம் என்றார்.

அதிர்ச்சியடைந்த மந்திரி 'ஓ இவரது இந்த எண்ணத்தால்தான் நேற்று அரசருக்கும் எண்ணம் தடுமாறியிருக்கிறது' என்று புரிகிறது. அவர் மேற்கொண்டு பேசாமல், பத்து சந்தனக் கட்டைகளை வாங்கிக் கொண்டு அரசரிடம் செல்கிறார். "நேற்று இரவு நாம் பார்த்த கடைக்காரர் தன் அன்புப் பரிசாக இதனை உங்களுக்கு அளித்திருக்கிறார்" என்று அவரிடம் கொடுத்தார். அவற்றை மகிழ்ச்சியுடன் வாங்கிய அரசர், தன் மனதுக்குள் அந்த கடைக்காரர் குறித்து தவறான எண்ணம் ஏற்பட்டதற்காக உள்ளபடியே வருந்தினார். மந்திரியிடம் சில பொற்காசுகளை கொடுத்து அந்த கடைக்காரரிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மந்திரி அந்தக் காசுகளைக் கொண்டு வந்து கடைக்காரரிடம், "இந்நாட்டு அரசர் தன் அன்புப் பரிசாக இந்தப் பொற்காசுகளை அளித்திருக்கிறார்" என்று கூறிக் கொடுக்கிறார். கடைக்காரரின் வறுமை நீங்குகிறது. கடைக்காரர் மனதுக்குள் அரசர் குறித்து தனது கெட்ட எண்ணம் குறித்து வருந்துகிறார். மந்திரியால் இருவரும் மனம் திருந்துகிறார்கள். அடுத்த முறை சந்திக்கும்போது இருவர் மனமும் அடுத்தவர் நலமுடன் வாழ வாழ்த்துகிறது. நமது எண்ணங்களின் வலிமையையும், அது ஏற்படுத்தும் பாதிப்புகளையும் இந்தக் கதை விளக்குகிறது.

நேர்மறையான சிந்தனைகள் மூலம் எத்தகைய பிரச்சினைகளையும் ஓட ஓட விரட்டலாம். நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொண்டால் நாம் மகிழ்ச்சியாக இருப்பதோடு, நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் மகிழ்வாக வைத்துக் கொள்ளலாம்.

நமக்குத் தெரியாமலே நம்முள் வளரும் தன்னியக்க எதிர்மறை எண்ணங்களை (Automa tic Negative Thoughts) ஆரம்பத்திலேயே கண்டறிந்து அழிக்க வேண்டும். அத்தகைய எதிர்மறை எண்ணங்களை நீக்க நாம் புதிதாக ஒரு விஷயத்தைக் கற்றுக் கொள்ளலாம். உடற்பயிற்சி, நடைப்பயிற்சி போன்ற ஏதாவதில் ஈடுபடலாம். இசை, நடனம், புத்தக வாசிப்பு போன்றவற்றுக்கு நேரம் ஒதுக்கலாம். தனிமையில் உழன்று கொண்டு நிலைமையை மேலும் சிக்கலாக்கிக் கொள்ளாமல் நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசலாம். அதனாலும் தீர்வுகள் கிடைக்க வாய்ப்பு உண்டு.



எதிர்மறை எண்ணங்கள் தேவையற்ற மன உளைச்சல், பதற்றம், சோர்வு போன்றவற்றுக்கு வழி வகுக்கும். இத்தகைய எண்ணங்களால் நமக்கு இழப்புகள்தான் ஏற்படும்.

நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்வது, நேர்மறைச் சிந்தனை உள்ளவர்களோடு இருக்கும் சூழலை ஏற்படுத்திக் கொள்வது, எதிர்மறையான எண்ணம் கொண்டவர்களைத் தவிர்ப்பது, மற்றவர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்வது, உற்சாகமாக இருப்பது, பயணங்கள் மேற்கொள்வது

(7ஆம் பக்கம் பார்க்க..)



# பிரான்சில் இந்திய துணை தூதரகம் திறப்பு மோடி, மேக்ரோன் இணைந்து பங்கேற்பு

பிரான்ஸ்நாட்டில்அமைக்கப்பட்டுள்ள இந்திய துணை தூதரகத்தை பிரதமர் மோடியும், அந்த நாட்டு அதிபர் இமானுவேல் மேக்ரானும் இணைந்து திறந்து வைத்தனர்.

பிரான்சில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சி மாநாடு என பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வருகிறார். அந்த வகையில், மார்செய்ல்ஸில் அமைக்கப்பட்டுள்ள இந்திய துணை தூதரகத்தை பிரதமர் மோடியும், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரானும் இணைந்து திறந்து வைத்தனர்.

பிரான்ஸ் அதிபர் அளித்த விருந்தில் பிரதமர் மோடி: நண்பரை சந்தித்ததில் மகிழ்ச்சி என பெருமிதம்

முன்னதாக, தூதரக திறப்பு நிகழ்வுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்திய பாரம்பரிய இசையான டோல் இசைக்கருவி வாசிப்பதை இருநாட்டு தலைவர்களும் பார்த்து ரசித்தனர்.

தொடர்ந்து, மஸார்குஸில் உள்ள இந்திய ராணுவ வீரர்களின் நினைவிடத்தில் பிரதமர் மோடியும், இமானுவேல் மேக்ரானும் மரியாதை செலுத்தினர். (ஐ)

# அமெரிக்க ஆசிரியரை விடுதலை செய்தது ரஷ்யா– டிரம்புக்கு இன்னொரு வெற்றி



ரஷ்ய சிறையில் நான்காண்டுகளாக அடைக்கப்பட்டிருந்த அமெரிக்க பள்ளி ஆசிரியர் மார்க் பொகெல் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அதிபர் டிரம்ப் மேற்கொண்ட முயற்சியால் இந்த விடுதலை கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மாஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஊழியராக பணியாற்றிய மார்க், அதன்பிறகு அங்குள்ள ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தார். கடந்த 2021ம் ஆண்டு போதைப் பொருள் வைத்திருந்ததாக அவரை ரஷ்ய போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அதன் பிறகு, அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இரண்டு முறை கைதிகள் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இந்த பட்டியலில் ஆசிரியர் மார்க் இடம்பெறவில்லை. மார்க்கை விடுதலை செய்வதற்காக, பைடன் அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டி வந்தனர்.

இத்தகைய சூழ்நிலையில், புதிதாக பொறுப்பேற்ற அதிபர் டிரம்ப் அதற்கான முயற்சி மேற்கொண்டார். அதன் பயனாக, ரஷ்யா சிறையில் அடைக்கப்பட்டிருந்த மார்க் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் இன்று, அமெரிக்க அதிபரின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் உடன் நாடு திரும்பினார்.

உக்ரைன் போர் தொடங்கியதற்கு பிறகு, அமெரிக்க அதிகாரிகள் யாரும் ரஷ்யா செல்லவில்லை. இப்போதுதான் முதல்முறையாக கைதியை மீட்டு வருவதற்காக அதிபரின் சிறப்பு தூதராக ஸ்டீவ் விட்காப் ரஷ்யா சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய சிறையில் இருந்து மார்க் விடுதலை செய்யப்பட்டதை, அவரது படத்துடன் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அளிக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற அந்த சமூக வலைதளப் பதிவு, அமெரிக்கர்களால் அதிக எண்ணிக்கையில் பகிரப்படுகிறது. (ஐ)




# செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் கூட்டறிக்கை 58 நாடுகள் கையெழுத்து

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்த சர்வதேச உச்சி மாநாட்டில், செயற்கை நுண்ணறிவு தொடர்பான கூட்டு அறிக்கையில், 58 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

ஏ.ஐ., எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சி மாநாடு, ஐரோப்பிய நாடான பிரான்சின் பாரிஸ் நகரில் நடைபெற்றது. பிரான்ஸ் அதிபர் மேக்ரோன், இந்திய பிரதமர் மோடி இணை தலைமை வகித்து மாநாட்டை நடத்தினர். இதில், பல நாட்டுத் தலைவர்கள், தொழில்நுட்பத் துறை நிறுவனங்களின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். மாநாட்டில், செயற்கை நுண்ணறிவு தொடர்பான கூட்டு அறிக்கையில், 58 நாடுகள் உள்ளிட்ட 60 பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

கையெழுத்திட்ட நாடுகளில் ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரேசில், கனடா, சீனா, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, நியூசிலாந்து, போலந்து, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா, ஸ்பெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், உக்ரைன் ஆகியவை அடங்கும்.

'பூமிக்கும், அதன் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் செயற்கை நுண்ணறிவு' என்ற தலைப்பிலான கூட்டறிக்கை, பங்கேற்ற அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளாலும் ஏற்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், 'தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் அனைவருக்கும் நம்பிக்கையும், பாதுகாப்பும் இருக்க வேண்டும், அனைவருக்கும் அணுகுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், பொது நலன் கருதும் ஏ.ஐ., தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

கூட்டறிக்கையில், மாநாட்டின் நிறுவன உறுப்பினர்களான நாடுகள் இணைந்து, பொது நலன் கருதி பிரத்யேக ஏ.ஐ., தளம் ஒன்றை நிறுவியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தளம், தனியார் மற்றும் அரசுகள் சார்பில் மேற்கொள்ளப்படும் ஏ.ஐ., முன்னெடுப்புகளுக்கு இடையிலான இடைவெளியை இணைப்பதற்கு உதவியாக இருக்கும்.

வேலைச்சந்தையில், ஏ.ஐ., தொழில்நுட்பத்தின் தாக்கம் குறித்த அறிவை, அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். இதற்கென தொடர் கண்காணிப்பகங்களை ஏற்படுத்த வேண்டும். திறன் மேம்படுத்தவும், தரமான வேலைச்சூழல் ஏற்படுத்தவும் இவை அவசியம் என்றும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இதை செய்யாவிட்டால் போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்: இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை



'ஹமாஸ் அமைப்பு சனிக்கிழமைக்குள் பிணைக் கைதிகளை விடுவிக்காவிட்டால் காசா போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்' என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் காசா உள்ளிட்ட பாலஸ்தீன பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே, 2023, அக்., 7ல் போர் துவங்கியது. அமெரிக்கா, கத்தார், எகிப்து ஆகியவற்றின் மத்தியஸ்த முயற்சியால், போரை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது.

ஹமாஸ் பயங்கரவாதிகள் பிடித்துச்சென்ற பிணைக் கைதிகளை விடுவிக்கவும், அதற்காக இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்களை விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி, பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாக ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டி, பிணைக்கைதிகள் விடுவிப்பதை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பு சனிக்கிழமைக்குள் பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால் காசா போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்து உள்ளார். மேலும் அவர் கூறியிருப்பதாவது: ஹமாஸ் அமைப்பு இறுதியாக தோற்கடிக்கப்படும் வரை ராணுவம் தீவிர சண்டையில் ஈடுபடும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே, வரும் சனிக்கிழமைக்குள் இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிக்காவிட்டால், அமைதி ஒப்பந்தம் ரத்தாகும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஈ.பி.டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் கேரளாவின் கொச்சி என்ற இடத்தில் வைத்து தமிழகப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்தியாவின் புழல் சிறையில் அடைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்றாண்டுகளுக்கு முதல் பொறுப்பதிகா ரியாகப் பொறுப்பேற்றிருந்தார்.

தமிழ் மொழி பேசக் கூடியவராக இருந்தமையால் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் தமிழ் மக்கள் இவரை இலகுவில் அணுகக்கூடியவாறு இருந்தமையால், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குற்றச்செயல்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்படிருந்தன.

இந்நிலையில், பொறுப்பதிகாரிக்குப் பதுளைக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதிகளில் தமிழ் மொழி பேசக்கூடிய பொலிஸ் அதிகாரிகள் கடமையாற்ற வேண்டும் எனப் பல்வேறு தரப்பினரும் கோரி வரும் நிலையில் , தமிழ் மொழி பேசக்கூடிய பொறுப்பதிகாரி திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அர்ச்சுனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதி ஒன்றில் அர்ச்சுனா எம்.பி. மற்றும் சட்டத் தரணி கௌசல்யா ஆகிய இருவரும் நேற்று இரவு உணவருந்தச் சென்றுள்ளனர்.

அங்கு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இலங்கை-கயர் ஒருவருக்கும் சாரதி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அர்ச்சுனா எம்.பி. வீடியோ எடுத்துள்ளார்.

இதன்போது ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இலங்கை-கயர், "சட்டத்தரணி மற்றும் வைத்தியராக நீங்கள் இருவரும் இருந்துகொண்டு அனுமதியின்றி பிறரை வீடியோ எடுக்கலாமா?" - எனக் கேட்ட நிலையில், தொடர்ந்து அர்ச்சுனா எம்.பி. அங்கு நின்ற சாரதியை வீடியோ எடுத்துள்ளார்.

இந்நிலையில் அவரது தொலைபேசி பறிக்கப்பட்டு எறிந்த நிலையில் அர்ச்சுனா எம்.பி. அந்தச் சாரதி மீது கிளாஸால் தாக்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், காயப்பட்ட நபரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமையகப் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அர்ச்சுனா எம்.பியின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுளார். அதேவேளை, தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அர்ச்சுனா எம்.பி. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன." - என்றார்.

## சட்டவிரோத.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





விகாரைக்கு முன்பாகப் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும், சிவில் அமைப்புக்களின் உறுப்பி னர்களும், பொதுமக்களும் எனப் பல நூற்றுக்கணக்கா-னோர் இன்று காலை முதல் ஒன்று திரண்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் நடைபெறும் இடத்தில் பெரு மளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டு, தடைகள் போடப்பட்டு புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரமாக இருந்தது.

இவ்வாறான பல்வேறு அச்சுறுத்தல்கள், கெடு பிடிகள், எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் கறுப்புக்கொடி-களுடன் பெருமளவில் திரண்ட தமிழ் மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு எதிர்ப்புப் போராட்ட-த்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, "அகற்று அகற்று சட்டவிரோத விகா ரையை அகற்று, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், இனப்படுகொலை இராணுவமே வெளியேறு, இந்த மண் எங்களின் சொந்த மண், எமது நிலம் எமக்கு வேண்டும்" உள்ளிட்ட பல்வேறு கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

இதன்போது பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்டதால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டதால் முறுகல் நிலை ஏற்பட்டு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

எனினும், அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், எதிர்ப்புக குகளுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் விகாரைக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யூடியூப் சனலுக்கு எதிராக சுஜீவ முறைப்பாடு



கொழும்பு , பெப். 12

தன்னைப் பற்றி தவறான தகவல்களைப் பரப்பியதாகக் கூறி, யூடியூப் சேனல் ஒன்றுக்கு எதிராக, முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முறைப்பாடு அளி-த்துள்ளார்.

சுவிட்சர்லாந்தை தளமாகக் கொண்ட ஒருவரால் நடத்தப்படும் யூடியூப் சேனல், தனக்கு எதிராக அவதூறான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாகவும், தனது தனிப்பட்ட தகவல்களை வெளி யிட்டதாகவும் மனுதாரர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தப் முறைபைபாட்டில் யூடியூப்ப-ின் தாய் நிறுவனமான கூகிளையும் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு, இந்த வழக்கில் யூடியூப் நிறுவனம் இணைய இடைத்தரகராகச் செயல்பட்டதாக சேனசிங்க வாதிடுகிறார்.

சேனசிங்க சட்டவிரோதமாக அசெம்பிள் செய்யப்பட்ட ஏ8 லேண்ட் க்ரூஸரை சொந்தமாக வைத்-திருந்ததாகவும் பயன்படுத்தியதாகவும் யூடியூப் சேனல் குற்றம் சாட்டியது.

அதே சனலின் பிற காணொ ளிகள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரை விடுதலைப் புலிக ளுடன் தொடர்புபடுத்தி மேலும் குற்றச்சாட்டுகளை முன்வைத்-துள்ளதாகவும், அவை தவறானவை மற்றும் அவதூறானவை என்று சேனசிங்க கூறினார்.

ஊடகங்களுக்கு இது பற்றி கருத்து தெரிவித்த சேனசிங்க, தவ-றான தகவல்களுக்கு எதிராக ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தவும், இதுபோன்ற தவறான குற்றச்சாட்டு களிலிருந்து தனிநபர்களைப் பாது காக்கவும் சட்ட நடவடிக்கை எடுத்-துள்ளதாக கூறினார் (ஐ)

# குவைத் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு



கொழும்பு , பெப். 12

குவைத் பிரதமர் ஷேக் அஹமட் அப்துல்லா அல் அஹமட் அல் சபா மற்றும் ஜனாதிபதிக்கு இடை-யில் சந்திப்பு 2025 உலக உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் குவைத் பிரதமர் ஷேக் அஹமட் அப்துல்லா அல் அஹமட் அல் சபாவிற்கும் இடையிலான சந்திப்பொன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

தற்போது இலங்கையின் அரசியல் மற்றும் நிதி ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறைக்கான சாத்தியங்கள் விரிவடைந்துள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநா யக்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை வலுப்படுத்துவது மற்றும் சந்தையை பன்முகப்படுத்-துவது குறித்து இரு தரப்பும் கவனம் செலுத்தியதுடன், அதற்கான புதிய உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டிய-தன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியை பெற்றுக் கொள்வதற்கு குவைத் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி அநுர குமார திசா நாயக்க குவைத் பிரதமர் ஷேக் அஹமட் அப்துல்லா அல் அஹமட் அல் சபாவுக்கு நன்றி தெரிவித்தார்.

குவைத்தில் சுமார் 155,000 இலங்கைப் பணி யாளர்கள் இருப்பதாகவும், அவர்களிடமிருந்து 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் வருமானமாக கிடைப்பதாகவும், இது இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பலமாக இருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜி-தஹேரத் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளார்(ஐ)

# மனமே மகிழ்ந்திரு!.......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போன்றவற்றின் மூலம் நேர்மறைச் சிந்தனையாளர் களாக நம்மை மாற்றிக் கொள்ளலாம்.

நேர்மறை பேச்சு செயல்கள் எண்ணங்கள் போன றவற்றை முதலில் நம்மிடம் இருந்து வளர்த்துக் கொள்ள வேண்டும். குழந்தையின் மனநிலையும், ஞானியின் பக்குவமும் கிடைக்கப் பெற்றவர்கள் வாழ்க்கையைக் கொண்டாடுபவர்கள். பள்ளிகளில் மீண்டும் நீதிபோதனை வகுப்புகளை வைத்து இளமையில் இருந்தே நேர்மறை எண்ணங்களை ஊட்டி வளர்க்க வேண்டும். எந்த ஒரு விஷயத்தை-தயும் நேர்மறையான வார்த் தைகளில் சொல்லிப் பழகுதலும், பழக்குதலும் நன்று.

நாம் வாழும் சூழல் எத்தகையதாக இருந்தாலும் நம்மை சுற்றி இருக்கும் மனிதர்கள் எத்தகைய சிந்த னைகள் கொண்டவர்களாக இருந்தாலும் நாம் நேர-மறை சிந்தனை கொண்டவர்களாக இருந்து, அந்த சூழலையே மாற்றிவிடும் எண்ணத்தை எப்போதும் வளர்த்துக்கொள்ள வேண்டும். நம்மிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதுபோல பிறரிடம் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்மறை எண்ணங்கள் முற்றிலுமாக ஒருவரிடம் இருந்து அழியாது. ஆனால் அதனைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் நம்மிடம்தான் இருக்கிறது. சிறிய விஷயங்களைக் கூட நல்ல சிந்தனைகளுடன் அணுகத் தொடங்கினால் நாளடைவில் பெரிய விஷயங்களும் நம் கைவசப்படும். எத்தனையோ சந்தோஷங்கள் நம்மீது தினமும் கொட்டப்படுகின்றன. நாம் மனது வைத்தால், அவற்றை அனுதினமும் ரசிக்கலாம். நம் கஷ்டங்களும், துயரங்களும் நிரந்தரமல்ல. இதைப் புரிந்து கொண்டவர்கள் சாதிக்கத் தொடங்குவார்கள். அதன்பின் "உள்ளாற எப்போதும் உல்லாலா. உல லாலா" என்ற உற்சாகம்தான்

# ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி வடக்கில் நேற்று முக்கிய சந்திப்புகளில்

இலங்கைக்கான ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ தலைமையில் இலங்கையில் பணியாற்றும் ஐ.நா.வின் அனைத்து முகவர் அமைப்புகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான வடக்கு மாகாண அலுவலர்களையும், வடக்கின் 5 மாவட்டச் செயலர்களையும் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தனித் தனியாக சந்தித்துக் கலந்துரையாடினர்.

முன்னதாக, வடக்கு மாகாண ஆளுநருக்கும், இலங்கைக்கான ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கும் இடையில் சிநேகபூர்வமான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாகவும், அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் வடக்கு மாகாண ஆளுநருடன், ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருடன், ஐ.நா.வின் அனைத்து முகவர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.








வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபலானின் வரவேற்புரையைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் உரையாற்றினார்.

ஐ.நா.வின் பல்வேறு அமைப்புக்களால் மேற்கொள்ளபபடும் உதவிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்ததுடன், குறிப்பாக மீள்குடியமர்வின் போதான உதவிகளை மறக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதற்கு அந்த உதவிகள் பெரிதும் உறுதுணையாக இருந்ததாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடக்கின்ற நிலையிலும் கிராமிய அபிவிருத்தியில் இன்னும் பல மைல் தூரம் பயணிக்கவேண்டியிருப்பதைக் குறிப்பிட்ட ஆளுநர், அந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் உதவிகளைச் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்தார்.





போருக்கு முன்னரான வடக்கின் ஏற்றுமதி நிலைமையையும் தற்போதைய நிலைமையையும் சுட்டிக்காட்டிய ஆளுநர், விவசாயம் மற்றும் மீன்பிடியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் என்பன பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்டச் செயலர்களுடன் கலந்துரையாடாது தன்னிச்சையாக கடந்தகாலங்களில் வர்த்தமானியில் தமது ஆளுகைப் பிரதேசங்கள் என மக்களின் குடியிருப்பு மற்றும் வயல்காணிகளை வெளியிட்டமையால் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை இன்னமும் தொடர்வதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

ஆளுநரைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி, வடக்கைச் சேர்ந்த பல தரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம் எனக் குறிப்பிட்டதுடன் முன்னுரிமை அடிப்படையில் வேலைத் திட்டங்கள் அமையும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் யாழ்ப்பாணம் பயணம் தொடர்பிலும், அவர் இதன்போது வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பிலும் குறிப்பாக மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் என்ற உறுதிமொழி தொடர்பிலும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி இங்கு பிரஸ்தாபித்தார்.

பாதுகாப்புத் தரப்பினர் முன்னெடுத்துள்ள வர்த்தக நடவடிக்கைகளால் சிவில் சமூகத்தினருக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் கலந்துரையாடியதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். மக்களுக்கு வாக்குறுதியளித்த பல விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளமையையும் அவர் இங்கு நினைவுகூர்ந்ததுடன் இந்தப் பகுதி மக்கள் முதல் தடவையாக அரசுக்குத் தேர்தலில் பெருமளவு ஆதரவு வழங்கியுள்ளமையும் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றத்தின் சவால்கள் தொடர்பிலும், தென்பகுதிக்கும் வடக்குக்கு இடையிலான இரட்டை இடைவெளி தொடர்பாகவும் வடக்கு மாகாண பிரதம செயலர் குறிப்பிட்டார்.

இளைய சமூகத்தைப் பாதுகாக்கவேண்டிய தன் அவசியத்தையும் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் விவரித்தார். வேலை வாய்ப்பின்மை, கீழுழைப்பு ஆகியன தொடர்பிலும் பிரதம செயலர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை இலத்திரனியல் மயப்படுத்தும் நடவடிக்கைக்கு யு.என்.டி.பி. நிறுவனம் ஆதரவு வழங்குவதற்கு பிரதம செயலர் நன்றிகளைத் தெரிவித்தார்.

வடக்கு மக்களின் நம்பிக்கையை தக்கவைப்பதற்கு அரசு எவ்வாறான நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பது தொடர்பாகவும் ஐ.நா. முகவர் அமைப்பின் பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும், வடக்கு மாகாணத்தின் கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் வசதி, சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பின் முடிவில் சுகாதார நகர திட்டத்துக்கு யாழ்ப்பாணம் நகரம் தெரிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியால் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ்.கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் ஆர்.சுரேந்திரகுமாரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இதைத் தொடர்ந்து வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்களுடன் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மற்றும் ஐ.நா. முகவர் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2025 இல் வெளியிடப்பெற்றது.